## காமாலை நோயாளி மதிவாணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் !

உடல் நோய் ஏற்பட்டால் அனுதாபம் கொள்ளலாம். ஆனால், மனநோய் கொண்ட மதியற்ற வாணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளானால் நாம் என்ன செய்வது?

30.6.2019 அன்று, சென்னை தொலைபேசி NFTE BSNL இணையதளத்தில், நமது BSNLEU பொதுச் செயலாளர் தோழர். பி. அபிமன்யுவைப் பற்றி, பொய்த் தகவல்களை வெளியிட்டு, பொய்யுரை நிகழ்த்தியுள்ளார். BSNL GM(SR) அவர்கள், வர இருக்கின்ற அங்கீகார தேர்தலில், கூட்டணி வைத்து போட்டியிடக் கூடாது என்ற உத்தரவை வெளியிட்டதற்கு, BSNLEU பொதுச் செயலாளர் கொடுத்த கடிதம்தான் காரணம் எனக் கூறியதாக செய்தி வெளியிட்டுள்ளார். நமது பொதுச் செயலாளர் தோழர். பி. அபிமன்யு அவர்கள், கூட்டணிகள் அமைக்கப்படுவதற்கு எதிராக எந்தக் கடிதத்தையும் நிர்வாகத்திற்குக் கொடுக்கவில்லை என்பதை முதலில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கூட்டணி கூடாது என்று உத்தரவிட்ட BSNL நிர்வாக அதிகாரி GM(SR) தான், குள்ள நரித்தனதோடு குயுக்தியாக தோழர் இஸ்லாம் அகமதிடம் தகவல் கூறினாராம். இந்த விஷயத்தை நிர்வாகம் ஏன் NFTE சங்கத்தின் பொதுச்செயலாளரான தோழர் சந்தேஸ்வர் சிங் அவர்களிடம் கூறாமல் இஸ்லாம் அகமதிடம் கூறுகிறார்கள்? இந்த விஷமத் தனமான தகவலைக் கண்டித்து BSNL ஊழியர் சங்கம் DIRECTOR(HR)இடம் புகார் கடிதம் கொடுத்துள்ளது. BSNL ஊழியர் சங்கம் 7 அங்கீகார தேர்தல்களில் 6 முறை வென்றதனாலும், BSNL ஊழியர்களின் நெஞ்சங்களில் பாதுகாக்கும் கோட்டையாக நீக்கமற நிறைந்திருப்பதாலும், மதி வாணனுக்கு பொறாமை உச்சந்தலைக்கு ஏறி, அதிருப்தியும், விரக்தியும் பரிபூரணமாக ஆட்டிப்படைக்கும் காரணத்தால்தான் இப்படிப்பட்ட அவதூறுகளை அன்றாடம் அள்ளி வீசுகிறார். இத்தனை குப்பைகளை அந்த மூளை எவ்வாறு சுமக்கிறது என்பது பலரின் கேள்வியாகும்.

ஒற்றுமையை என்றும் இதயசுத்தியோடு உயர்த்திப் பிடிப்பது BSNL ஊழியர் சங்கம் தான். NFTE-யின் தலைமையோடு நல்லிணக்கத்தோடு செயல்பட்டு, BSNL நிறுவனத்தைக் காக்கவும், ஊழியர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கவும், ஒன்று பட்ட போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வது BSNL ஊழியர் சங்கம் என்பது ஊழியர்கள், அதிகாரிகள் அனைவரும் ஏற்றுக் கொண்ட ஒன்றாகும். ஒற்றுமையின் நாயகன் BSNL ஊழியர் சங்கம் தான். நிர்வாகமும், அரசாங்கமும் அதைக் கண்டு கண்ணெரிந்தால் நம்மால் புரிந்துக் கொள்ள முடியும். ஆனால் வயிற்றெரிச்சல் கொள்வது மதிவாணன் போன்ற குறுக்கு புத்தியாளர்கள் தான்.

அதிக வாக்குகள் பெறும் ஒரு சங்கத்திற்கு மட்டும் அங்கீகாரம் என்று இருந்ததை இன்று மதிவாணன் கூட அங்கீகரத்தை அனுபவிக்கும் வகையில் இரண்டாவது சங்கத்திற்கும் அங்கீகாரம் என்பதை போராடி பெற்றுத்தந்தது BSNL ஊழியர் சங்கம் தான் என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட விஷயம். அதனை மதிவாணன் மறந்து போனது அவரது குதர்க்க புத்தி தான் காரணம் என்பதும் அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

நடைபெற உள்ள எட்டாவது சங்க அங்கீகார தேர்தலில் BSNL ஊழியர் சங்கம் 50 சதவிகித வாக்குகளுக்கும் மேலாக பெறும் என்பது அனைவரின் ஏகோபித்த கணிப்பு. அப்படி ஒரு நிலை வந்தாலும் இரண்டாவது சங்கத்திற்கும் அங்கீகாரம் தர வேண்டும் என்ற தீர்மானத்தை மைசூரில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் 9வது அகில இந்திய

மாநாட்டில் அனைவரும் ஏற்கச் செய்து ஏகோபித்த தீர்மானமாக நிறைவேற்றியவர் தோழர் P.அபிமன்யு. அந்த அபிமன்யு தான் மீண்டும் பொதுச்செயலாளராக வரவேண்டும் என மாநாட்டில் கலந்துக் கொண்ட ஆயிரக்கணக்கான சார்பாளர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுத்தனர் என்பதும் உண்மை. அப்படிப்பட்ட தோழரை பற்றி ஒற்றுமைக்கு எதிரி என்றும் சங்கத்திற்குள் பிரச்சனை என்றும் தோல்வி ஜுரத்தில் பிதற்றுகிறார் மதிவாணன். ஆயிரம் கரங்கள் மறைத்து நின்றாலும் ஆதவனை மறைக்க முடியாது. 8வது சங்க அங்கீகார தேர்தலில் மீண்டும் BSNL ஊழியர் சங்கம் முதன்மை சங்கமாக வெற்றி பெறுவதை மதிவாணனால் தடுக்கவே முடியாது.

மேற்கு வங்கத்தில் இடது சாரி அரசாங்கம் வெற்றி வாய்ப்பை இழந்ததை இத்தனை நாள் கழித்து ஏன் மதிவாணன் தற்போது கொண்டாடுகிறார். இவர் இடது சாரியாக இருக்க லாயக்கில்லை எனவும் கட்சியை சுத்தமாக்க அழுக்கை அகற்றவும், இவர் சார்ந்திருந்த CPI கட்சி இவரை தூக்கி வெளியில் எறிந்து விட்டது என்பதால் தானோ? இடது சாரிகள் ஒற்றை இலக்கத்தில் இந்த பாராளுமன்றத்தில் இருந்தாலும், உலக தொழிலாளர்களை ஒன்று சேர அறைகூவல் விடுப்பது அவர்கள் தான் என்பதை மறந்து விட்டு பேசுகிறார்.

இந்திய நாட்டு மக்களை சின்னாபின்னப்படுத்தி வரும் தாராளமயக் கொள்கைகளை எதிர்த்து உழைப்பாளி மக்களின் ஒன்று பட்ட போராட்டம் ஜனவரி 8 மற்றும் 9ஆகிய தேதிகளில் நடைபெற்ற போது, அந்த போராட்டத்தை சீர்குலைக்கும் வகையில் தூத்துக்குடியில் கூட்டம் நடத்தி வேலை நிறுத்தத்தில் பங்கேற்க வேண்டாம் என அறிவுறுத்திய அறிவுடைய(?) தொழிற்சங்க தலைவர் இவர் தானே!

பிப்ரவரி 18 முதல் 20 வரை BSNLஐ காக்க, BSNL ஊழியர்களின் உரிமைகளை வென்றடைய மாபெரும் வேலை நிறுத்தத்தை BSNLல் உள்ள அனைத்து அதிகாரிகளும், ஊழியர்களும் (AUAB) நடத்தினோம். ஜீவ மரண போராட்டத்தில் நாமெல்லாம் ஈடுபட்டிருந்த போது ஊழியர்களை திரட்டி போராட வேண்டிய சென்னை மாநில செயலாளர் மதிவாணன் வேலைநிறுத்த காலத்தில் லண்டன் குளுகுளுப்பை அனுபவிக்க உல்லாச பயணம் சென்றவர்.

BSNL வருமானம் அரசின் சூழ்ச்சியால் வீழ்ச்சி அடைந்து வருகிறது. BSNL ஐ தனியார் மயமாக்கிட அரசு துடிதுடிக்கிறது. இதை எதிர்த்து BSNL ஊழியர் சங்கம் அனைவரையும் திரட்டி தொடர்ந்து போராடி வருகிறது. ஆனால் அரசின் கொள்கைகளை எதிர்ப்பதை விடுத்து, BSNL ஊழியர் சங்கத்தின் மீது மதிவாணன் விஷம் தோய்ந்த அம்புகளை எய்வதன் நோக்கம் என்ன?

அரசின் சூழ்ச்சியை முறியடிக்க உருக்கு போன்ற ஒற்றுமையுடன் அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகள் சங்கங்களும் (AUAB) போராடி வரும் போது அந்த ஒற்றுமையை சீர்குலைக்க, ஓயாமல் சதித் திட்டம் போடுகிறார், மதிவாணன் என்பது தான் காரணம் ஆகும்.

உழைப்போரின் எதிரி பொதுத்துறை விரோத அரசு மட்டுமல்ல!

உள்ளிருந்தே குழப்பும் மதிவாணன்களும் தான்!

இரண்டையும் வீழ்த்துவோம் !